# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 160/42 — 1975 අප්‍රේල් 19 වැනි සෙනසුරාදා — 1975.04.19

160/42 ம் இலக்கம்—1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : டபிளியு. 68 (50)/75.

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ம் பிரிவின் கீழ் முதலமைச்சரின் விதப்புரையின்மீது சனாதிபதியால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

வி. கொபல்லவ,
சனாதிபதி.

சனாதிபதியின் அலுவலகம்,
நுவரெலியா,
1975 ஏப்பிறல் 19.

#### ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 1975 ம் ஆண்டின் 4 ஆம் இலக்க, (ஆட்சியைக் கவிழ்த்தலைத் தடுத்தல்) அவசரகால ஒழுங்கு விதிகள் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. தேசிய அரச பேரவையிலான நடவடிக்கைகளில் அல்லது ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னரான நடவடிக்கைகளில் எடுத்துரைக்கப்படும், அல்லது செய்யப்படும் சொற்கள் அல்லது நடத்தை அல்லது வேறு ஏதேனும் சைகை மூலமாகவன்றி ஆள் எவரும் இலங்கைக் குடியரசினது அரசியலமைப்பின் அல்லது அதன் ஏற்பாடு எதனதும் செல்லுபடியாந் தன்மையினை மறுத்தலாகாது, அல்லது வேறு எவ்வகையிலும், மீறுதலோ எதிர்த்தலோ அல்லது கேள்விக்குட்படுத்தலோ ஆகாது.

எனினும், இலங்கைக் குடியரசினது அரசியலமைப்பின் செல்லுபடியாந்தன்மையினை மறுக்காது, அல்லது எவ்வகையிலேனும் அதன் செல்லுபடியாந் தன்மையினை எதிர்க்காது அல்லது கேள்விக்குட்படுத்தாது அரசியலமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முறையாக அரசியலமைப்பு முற்றாகவோ பகுதியளவிலோ மாற்றப்பட வேண்டும் என ஆள் எவரும் கிளர்ச்சி செய்தல் இவ் ஒழுங்கு விதிகளின் கீழ் தவறென்றாதல் ஆகாது.

3. ஆள் எவரும் எடுத்துரைக்கப்படும் அல்லது செய்யப்படும் சொற்கள் நடத்தை அல்லது சைகைமூலம், அரசியலமைப்பின் அல்லது அதன் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாக அல்லது நியமிக்கப்பட்டதாகக் கொள்ளப்படும், ஏதேனும் நிறுவனத்தின் அல்லது எவரேனும் அலுவலர்களின் அதிகாரத்தினை எவ்வகையிலேனும் மீறும்படி அல்லது மதிப்புக்கேடாகச் செயலாற்றும்படி அல்லது அதன் கீழாக்கப்பட்ட அல்லது சட்டமாக்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டங்களை மீறி அல்லது அவற்றை மதிப்புக்குறைக்கும் வகையில் செயலாற்றும்படி நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆள் எவரையும் தூண்டுதலாகாது, ஊக்குதலாகாது அல்லது உற்சாகப்படுத்தலாகாது.

4. அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி ஒன்றினால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டமொன்றில் புரியப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி ஒன்றின் சஞ்சிகையில் அல்லது செய்தித்தாளிலான பிரசுரத்தின் மூலம் புரியப்பட்ட இவ் ஒழுங்கு விதிகளின் கீழான தவறொன்றுக்கு எவரேனும் ஆள் ஏதேனும் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, அத்தகைய அரசியற் கட்சி சட்டத்தின் கீழ் அது அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியாக இருந்து வரும் அந்தஸ்தினை இழந்ததாதல் வேண்டும் என்பதுடன் ;

(அ) அத்தகைய கட்சிக்குச் சேர்ந்த அசைவுள்ள அசைவற்ற ஆதனம் யாவும் இலங்கைக் குடியரசிற்குப் பறிமுதலாதல் வேண்டும், அத்துடன்

(ஆ) இவ் ஒழுங்கு விதிகள் வலுவுள்ளனவாக வந்த தேதியின் பின்னர் அத்தகைய அரசியற் கட்சியினால் அல்லது அதன் சார்பில் செய்யப்பட்டதான அத்தகைய ஆதனப்பராதீனம் அல்லது உரித்து மாற்றம் எதுவும் வெற்றும் வெறிதுமானதாக இருப்பதாகவும் இருந்திருப்பதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

5. இவ் ஒழுங்கு விதிகளின் கீழான தவறு எதற்கும் ஏதேனும் நீதிமன்றத்தினால் குற்றத் தீர்ப்பளிக்கப்படும் ஆள் ஒருவர் அரசியலமைப்பின் நியதிகளுக்கிணங்கச் செய்து கொள்ளப்பட்ட, எடுத்துக் கொள்ளப்பட்ட சத்தியத்தினால் அல்லது உறுதிமொழியினால் கட்டுப்பட்டவராயின் அத்தகைய தவறுக்கென நீதிமன்றம் விதிக்க வேண்டிய வேறு எத்தண்டனையுடனும் மேலதிகமாக :

(அ) அவ் ஆளின் அசைவுள்ள அசைவற்ற ஆதனம் யாவும் அத்தகைய குற்றத் தீர்ப்பின் காரணமாக இலங்கைக் குடியரசுக்கு இழக்கப்பட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்,

(ஆ) இவ் ஒழுங்கு விதிகள் வலுவுள்ளனவாக வந்த தேதியின் பின்னர் அத்தகைய ஆளாற் செய்யப்படும் அத்தகைய ஆதனப் பராதீனம் அல்லது உரித்து மாற்றம் எதுவும் வெற்றும் வெறிதுமானதாக இருப்பதாகவும் இருந்திருப்பதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

6. இவ் ஒழுங்கு விதிகளின் நோக்கங்களுக்காக, “ உற்சாகப்படுத்தல் ” என்பது ஏதேனும் வெகுமதியை வழங்க முனைதலை அல்லது வாக்குறுதியளித்தலை அல்லது ஏதேனும் தண்டனை பற்றி அல்லது குற்றவிறுப்புப் பற்றி ஏதேனும் பயமுறுத்தலைக் காட்டுதலை உள்ளடக்கும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.